# சுதேச வாசகம்

## இரண்டாம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாட நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
**வி. சூ. சுவாமிநாதன்**
தொகுத்ததை
சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
**வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை**
திருத்தியது.

**வி. சூ. சுவாமிநாதன்**
பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு,
மதுரை.

பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு,
சென்னை.

பதிப்புரிமை] : : [விலை ரூ. 0-6-0

# முன்னுரை

1939-ஆம் வருடம் வெளியிடப்பட்டுள்ள பாடத்திட்டப்படி இந்த சுதேச வாசகம் இரண்டாம் புத்தகத்தை வெளியிடலானோம். ஏற்கெனவே வெளிவந்துள்ள முதற் புத்தகத்தின் தொடர்ச்சியாக உயர்ந்த உரை நடை, புதுச் சொற்கள் முதலியவை இதில் படிப்படியாய்ப் புகுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் நாட்டுப் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றனவாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. எந்தப் பாடத்திலும் எளிதில் கற்பிக்கக் கூடியவைகளையும், அவைகளுக்கு அவசியமான சில புதுச் சொற்களையும், சிரமமில்லாமல் புகட்டக்கூடிய விதத்திலேயே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இடையிடையே கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள், பிள்ளைகளின் ஞாபக சக்தியை விருத்திசெய்யவும், படித்த பாடங்களை மனதிற் பதியச் செய்யவும், தக்க முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒற்று இரட்டித்தல், இனவெழுத்துத் தோன்றல், வடமொழி எழுத்துக்கள், ஒலி பேதங்கள் இவைகளை நன்ருய்க் கற்பிக்க, தனிப்பட்ட பாடங்களும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உச்சரிப்பைச் சீர்திருத்துவதற்கு இவை இன்றியமையாதவை. இரண்டாவது வகுப்பில் பிள்ளைகள் இவைகளைத் தெரிந்துகொண்டால்தான், உச்சரிப்பிலும் எழுத்திலும் தவறுகள் ஏற்படா. விவரமாகப் பொருள் கூறி, உதாரணங்களுடன் விளக்க வேண்டிய சொற்கள் மட்டுமே 24-வது பாடத்திலிருந்து தனியாய்க் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட நோக்கங்களை நன்குணர்ந்து, ஒவ்வொரு பாடத்தையும் 'எந்தெந்த விதங்களில் விரிவாகக் கற்பிக்கலாம்' என்று திட்டம் போட்டுக்கொண்டு கற்பித்தல் நலம். ஒவ்வொரு பாடமும் ஆசிரியர் யுக்தம்போல் விரிவுபடுத்தத் தக்கதாகவே எழுதப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

இந்நூலைத் திருத்திப் பதிப்பிக்க உதவிய ஸ்ரீ. வித்துவான், எஸ். முத்து ஐயங்கார் பி. ஏ. (ஹானர்ஸ்), எல். டி., அவர்களுக்கு எமது நன்றி.

ஆசிரியர்கள்

திருத்திய இரண்டாம் பதிப்பு. '55. பாரதி பிரஸ், மதுரை.

# தேச வணக்கம்

(கும்மி மெட்டு)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்க ளெங்கும் காணும்நற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர்சாரும் சிறப்பச்
சீர்வளமும் மிகத்திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங்கும் வெகுகாலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம். 4

—வே. முத்துசாமி ஐயர்


# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| | படப் பழக்கம்—1 | 5 |
| 1 | சொல் தொடர்கள் | 6 |
| 2 | சொல் தொடர்கள் | 7 |
| 3 | என் குடும்பம் | 8 |
| 4 | என் தாய் | 9 |
| 5 | என் வீடு | 10 |
| 6 | ஏவல் வாக்கியங்கள் | 11 |
| 7 | எங்கள் பாடசாலை | 12 |
| 8 | ஊர் ஊர் | 14 |
| 9 | பசு | 15 |
| 10 | வடமொழிச் சொற்கள் | 18 |
| 11 | கோழி | 20 |
| 12 | எழுத்துக்களின் ஒலி பேதங்கள் | 21 |
| | படப் பழக்கம்—2 | 22 |
| 13 | கைவீசல் (பாட்டு) | 23 |
| 14 | தனி வாக்கியங்கள் | 24 |
| 15 | பிராணிகளின் ஒலிகள் | 25 |
| 16 | இரட்டைச் சொற்கள் | 26 |
| 17 | சூரியனும் சந்திரனும் | 28 |
| 18 | திசைகள் | 29 |
| 19 | உரையாடல் | 30 |
| 20 | உரையாடல் | 31 |
| 21 | உரையாடல் | 32 |
| 22 | சுகவழி (பாட்டு) | 34 |
| 23 | எலிக் கூடு | 35 |
| 24 | பூனை | 37 |
| 25 | முரசுப் பாட்டு | 38 |
| 26 | தாய் | 39 |
| 27 | வாகனங்கள் | 41 |
| 28 | பிராணிகளிடத்து அன்பு (பாட்டு) | 44 |
| | படப் பழக்கம்—3 | 45 |
| 29 | நல்ல பழக்கம் (பாட்டு) | 46 |
| 30 | புத்தியுள்ள காகம் | 47 |
| 31 | பள்ளிக்கூடத் தோட்டம் | 48 |
| 32 | அரிசியின் கதை | 51 |
| 33 | கடைத் தெரு | 54 |
| 34 | புறாவும் எறும்பும் | 57 |
| 35 | கிராமம் | 60 |
| 36 | ஆத்திசூடி (பாட்டு) | 63 |
| 37 | உலகநீதி (பாட்டு) | 64 |

# சுதேச வாசகம்

## இரண்டாம் புத்தகம்


படப் பழக்கம்—1




குறிப்பு:—முதலில் ஒவ்வொரு பிள்ளையையும் படத்தில் காண்பவைகளில் ஒன்றைமட்டும் கூறச் சொல்லவும். பிறகு உயிருள்ளவைகளையும், உயிரற்றவைகளையும் பிரித்துச் சொல்லச் செய்யவும். தெரிந்த வார்த்தைகளைக் கற்பலகையில் எழுதச் சொல்லவும்.


## 1. சொல் தொடர்கள்


கை விரல்   கைத் தடி

தங்க மோதிரம்   தங்கக் காப்பு

குதிரை வால்   குதிரைக் கால்

கோழிமுட்டை   கோழிக் குஞ்சு

கிளி மூக்கு   கிளிக் கூண்டு

வாழை இலை   வாழைப் பழம்


ஆல மரம்   ஆலம் பழம்

பூ மாலை   பூச் செடி

## 2. சொல் தொடர்கள்

| | |
|---|---|
| அரிசி மூட்டை | அரிசிக் கூடை |
| ஆட்டு மந்தை | ஆட்டுக் குட்டி |
| இரும்பு ஆணி | இரும்புக் கம்பி |
| எட்டு அணு | எட்டுத் திக்கு |
| எருமை மாடு | எருமைப் பால் |
| கீரை விதை | கீரைப் பாத்தி |
| கொய்யா மரம் | கொய்யாக் காய் |
| சரிகை மாலை | சரிகைச் சேலை |
| நாய் வால் | நாய்க் குட்டி |
| பட்டு நூல் | பட்டுப் பூச்சி |
| மர நாற்காலி | மரப் பொம்மை |
| மாட்டு வண்டி | மாட்டுக் கொம்பு |
| வெள்ளி ரூபாய் | வெள்ளிச் செம்பு |
| தென்ன மட்டை | தென்னந் தோப்பு |
| மா மரம் | மாங் காய் |
| வேப்ப மரம் | வேப்பம் பழம் |

## 3. என் குடும்பம்



இவர் என் தாய்.

அவர் என் தந்தை.

இருவரும் என் பெற்றோர்.

அவன் என் அண்ணன்.

இவன் என் தம்பி.

இருவரும் என் சகோதரர்.


இவள் என் அக்காள்.

அவள் என் தங்கை.

இருவரும் என் சகோதரிகள்.

எல்லோரும் ஒரு குடும்பம்.

## 4. என் தாய்



இவர் என் தாய்.

நான் இவர் பிள்ளை.

இவர் என்னைப் பெற்றவர்.

என்னிடம் அன்பு உள்ளவர்.

பாலூட்டி என்னை வளர்த்தவர்.

எனக்குத் தாலாட்டுப் பாடியவர்.

எனக்காக மருந்து உண்டவர்.

என்னை நல்ல பிள்ளை ஆக்கியவர்.

தாயே மேலான தெய்வம்.

## 5. என் வீடு



இது என் வீடு.

இது உயரமான இடத்தில் இருக்கிறது.

இதில் மரக் கதவுகள் உண்டு.

பெரிய ஜன்னல்களும் இதில் உண்டு.

இரும்புக் கம்பிகளைப் பார்.

கல் தூண்களும் இருக்கின்றன.

இங்கே நல்ல வெளிச்சம் உண்டு.

சுத்தமான காற்றும் அடிக்கிறது.

நாங்கள் இதில் இருக்கிறோம்.

## 6. ஏவல் வாக்கியங்கள்

| | |
|---|---|
| தலையை ஆட்டு. | புத்தகத்தை எடு. |
| கண்ணை மூடு. | எழுத்துக் கூட்டு. |
| வாயைத் திற. | பாடம் வாசி. |
| கையை உயர்த்து. | புத்தகத்தை வை. |
| கையைத் தாழ்த்து. | படத்தைப் பார். |
| கைகளைக் கொட்டு. | கதை சொல்லு. |


### பயிற்சி

பின்வரும் சொற்களிலிருந்து தகுந்த சொற்களை எடுத்து, கோடிட்ட இடங்களில் அமைத்துப்படி :—

(செய், போடு, போ, மூடு, அடி, பிடி, தூங்கு, படி, விழி, மூழ்கு, புசி, விளையாடு.)

| | |
|---|---|
| 1. உள்ளே——. | 7. மாலையில்——. |
| 2. கணக்குப்——. | 8. மீன்——. |
| 3. பாடம்——. | 9. குளத்தில்——. |
| 4. கும்மி——. | 10. சோறு——. |
| 5. கையை——. | 11. இரவில்——. |
| 6. வேலை——. | 12. காலையில்——. |

## 7. எங்கள் பாடசாலை



இது எங்கள் பாடசாலை.
இதில் நாங்கள் படிக்கிறோம்.
நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.
எங்கள் உபாத்தியாயர் வருகிறார்.
முதலில் நாங்கள் எழுந்திருக்கிறோம்.
அவருக்கு வந்தனம் சொல்லுகிறோம்.
பிறகு நாங்கள் உட்காருகிறோம்.
உபாத்தியாயர் பாடம் சொல்லுகிறார்.
கரும்பலகையில் கணக்குப் போடுகிறார்.
கற்பலகையில் நாங்கள் எழுதுகிறோம்.
காலை மாலை பாடம் வாசி.

## பயிற்சி

கோடிட்ட இடங்களில் தக்க வார்த்தையை அமைத்துப் படி:—

நீ எங்கே போகிறாய்?

நான் பள்ளிக்கூடம் ——.

அவன் எங்கே போகிறான்?

அவன் வீட்டுக்குப் ——.

நீ இங்கே வா.

நீ என்ன செய்கிறாய்?

நான் அங்கே வருகிறேன்.

அவன் வகுப்புக்கு ——.

அவள் வகுப்புக்கு ——.

உபாத்தியாயர் வகுப்புக்கு ——.

ராமன் கணக்குப் ——.

கோமதி கோலம் ——.

கமலா பாட்டுப் ——.

நீ கதை ——.

நான் கற்பலகையில் ——.

அவன் பம்பரம் ——.

அவள் கும்மி ——.

அவர்கள் இங்கே ——.


இவர்கள் அங்கே ——.

நீங்கள் எங்கே ——?

## 8. ஊர் ஊர்

| | | |
|---|---|---|
| ஊர் ஊர், | — | மயிலாப்பூர் |
| என்ன மயில்? | — | காட்டு மயில் |
| என்ன காடு? | — | ஆற்காடு |
| என்ன ஆறு? | — | பால் ஆறு |
| என்ன பால்? | — | கள்ளிப்பால் |
| என்ன கள்ளி? | — | இலைக் கள்ளி |
| என்ன இலை? | — | வாழை இலை |
| என்ன வாழை? | — | கற்பூர வாழை |
| என்ன கற்பூரம்? | — | ரஸ கற்பூரம் |
| என்ன ரஸம்? | — | மிளகு ரஸம் |
| என்ன மிளகு? | — | வால் மிளகு |
| என்ன வால்? | — | நாய் வால் |
| என்ன நாய்? | — | மர நாய் |
| என்ன மரம்? | — | பலா மரம் |
| என்ன பலா? | — | வேர்ப் பலா |
| என்ன வேர்? | — | வெட்டி வேர் |
| என்ன வெட்டி? | — | பனை வெட்டி |
| என்ன பனை? | — | தாளிப் பனை |
| என்ன தாளி? | — | விருந்தாளி |
| என்ன விருந்து? | — | மண விருந்து |
| என்ன மணம்? | — | பூ மணம் |
| என்ன பூ? | — | மாம் பூ |
| என்ன மா? | — | அம்மா. |

## 9. பசு



பசு வீட்டு மிருகம்.

பசுவை நாம் வளர்க்கிறோம்.

பசுவினால் நமக்கு நன்மை உண்டு.

பசுவோடு கன்று நிற்கிறது.

பசுவுக்குக் கால்கள் நான்கு.

பசுவின் பால் நல்ல ஆகாரம்.

பசுவில் சிவப்பு நிறம் நல்லது.

பசுவின் கொம்புகள் உறுதியானவை.

பசுவினிடத்தில் அன்பாய் இரு.

## பயிற்சி


படத்தைப் பார்த்துக் கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை :—



தலையால் வணங்குகிறோம். ——— பார்க்கிறோம். ——— பேசுகிறோம். ——— நடக்கிறோம்.



கோழியோடு குஞ்சுகளும் போகின்றன.
——— குழந்தையும் இருக்கிறது.
——— நாயும் வருகிறது.
——— பள்ளிக்கூடம் போகிறாள்.



குதிரைக்குக் கால்கள் நான்கு.
காக்கைக்குக் ——— இரண்டு.
——— தண்ணீர் ஊற்று.
——— கொம்புகள் ———.

வீட்டின் படத்தைப் பார்.

__________ கால்கள் நான்கு.

__________ மூக்கு சிவப்பு நிறம்.

__________ வால் நீளமானது.

கூட்டில் குருவி இருக்கிறது.

__________ பழங்கள் இருக்கின்றன.

__________ பையன் நிற்கிறான்.

__________ புத்தகம் வைத்திருக்கிறாள்.

## 10. வடமொழிச் சொற்கள்



ரோஜா புஷ்பம் அழகானது.

திராக்ஷைப் பழம் ருசியானது.

பட்டு வஸ்திரம் விலை அதிகம்.

இந்த வருஷம் மழை குறைவு.

அந்த ஜாடியில் ஜலம் ஊற்று.

ஜூனுக்குப் பின் ஜூலை மாதம்.

புஷ்ப ஹாரம் ஒன்று வாங்கு.

நாம் பேசும் பாஷை தமிழ்.

பிராணிகளிடத்தில் பக்ஷமாய் இரு.

## உரையாடல் பயிற்சி

கேள்விகளுக்குத் தகுந்தபடி கோடிட்ட இடங்களில் சொற்களைச் சேர்த்துப் படி:—

உன் பெயர் என்ன?

என் பெயர்———.

உன் ஊர் எது?

என் ஊர்———.

நீ எந்தத் தெருவில் வசிக்கிறாய்?

நான்———தெருவில் வசிக்கிறேன்.

உன் தகப்பனார் பெயர் என்ன?

என் தகப்பனார் பெயர்———.

உன் தகப்பனாருக்கு என்ன வேலை?

என் தகப்பனாருக்கு———வேலை.


நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

நான் இரண்டாவது வகுப்பில்———.

உன் வயது என்ன?

என் வயது———.

## 11. கோழி



கோழி வீட்டில் வளரும் பறவை.
இதன் இறகுகள் குட்டையானவை.
இது அதிக உயரம் பறக்காது.
பெட்டைக்கோழி முட்டை இடும்.
முட்டையிலிருந்து குஞ்சு வெளிவரும்.
கோழி மண்ணைக் கிளறி இரை தேடும்.
குஞ்சுகளைக் கூடவே கூட்டிப் போகும்.
ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர்.
அதன் தலையில் கொண்டை உண்டு.
அது அதிக அழகாய் இருக்கும்.
சேவல் அதிகாலையில் கூவும்.


## 12. எழுத்துக்களின் ஒலி பேதங்கள்

ஆசிரியர்க்கு : கண், தங்கம், மகன் ஆகிய சொற்களில் 'க' என்ற எழுத்தின் ஒலி வேறுபடுவதை மாணவர்கள் தெரிந்துகொள்ளும்படி நன்கு உச்சரித்துக் காட்டவும். பிற எழுத்துக்களுக்கும் இவ்வாறே.

| | | |
|---|---|---|
| **க**ண் | தங்**க**ம் | ம**க**ன் |
| தச்**ச**ர் | மஞ்**ச**ள் | **ச**ரம் |
| சட்**ட**ம் | க**ட**வுள் | ——— |
| **த**லை | பந்**த**ம் | ——— |
| **ப**ணம் | கம்**ப**ம் | ——— |
| மு**ற**ம் | முற்**ற**ம் | மூன்**று** |

கல் மிக கனமானது.
தச்சர் ஊஞ்சல் செய்கிறார்.
படத்தின் சட்டம் பார்.
இது தட்டார் செய்த நகை.
பலமாய் பறை அடி.
ஏணி ஏறிக் கீற்று எடு.
தனி வழி போவது பயம்.
பட்டுப் புடவை நீல நிறம்.
மஞ்சள் வர்ணம் பூசு.
தங்கம் அதிக விலை உள்ளது.
சுக்கும் மிளகும் வாங்கு.
மூன்று கூறு வற்றல் கொடு.

## படப் பழக்கம்—2



ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.




## 13. கை வீசல்

(பாட்டு)

கை வீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
மெதுவாய்த் தின்னலாம் கை வீசு
பழங்கள் வாங்கலாம் கை வீசு
பாடித் தின்னலாம் கை வீசு
பொம்மைகள் வாங்கலாம் கை வீசு
போய் விளையாடலாம் கை வீசு
சொக்காய் வாங்கலாம் கை வீசு
சொகுசாய்ப் போடலாம் கை வீசு
மல்லிகை வாங்கலாம் கை வீசு
மாலைகள் கட்டலாம் கை வீசு
கோவில் போகலாம் கை வீசு
கும்பிட்டு வரலாம் கை வீசு
தேரைப் பார்க்கலாம் கை வீசு
திரும்பி வரலாம் கை வீசு.

## 14. தனி வாக்கியங்கள்



பசு பால் கொடுக்கிறது.

எருது ஏர் உழுகிறது.

நாய் வீட்டைக் காவல் செய்கிறது.

பூனை எலியைப் பிடிக்கிறது.

குதிரை வண்டி இழுக்கிறது.

கழுதை பொதி சுமக்கிறது.


ஒட்டகம் பாரம் சுமக்கிறது.

மீன் தண்ணீரில் நீந்துகிறது.


சேவல் அதிகாலையில் கூவி எழுப்புகிறது.

காகம் அசுத்தங்களைப் போக்குகிறது.

## 15. பிராணிகளின் ஒலிகள்



| | |
|---|---|
| மயில் | அகவுகிறது. |
| கோழி | கூவுகிறது. |
| காக்கை | கரைகிறது. |
| குயில் | கூவுகிறது. |
| ஆந்தை | அலறுகிறது. |
| பூனை | சீறுகிறது. |
| நாய் | குரைக்கிறது. |
| நரி | ஊளையிடுகிறது. |
| ஆடு | கத்துகிறது. |
| பசு | கதறுகிறது. |
| குதிரை | கனைக்கிறது. |
| கழுதை | கத்துகிறது. |
| பன்றி | உறுமுகிறது. |
| யானை | பிளிறுகிறது. |
| புலி | உறுமுகிறது. |
| சிங்கம் | கர்ஜிக்கிறது. |



## 16. இரட்டைச் சொற்கள்

வாழைப்பழம் சீப்புச் சீப்பாய் இருக்கிறது.

காய்கள் குலை குலையாய்க் காய்க்கின்றன.

மனிதர் கூட்டம் கூட்டமாய் நிற்கிறார்கள்.

ஆடுகள் மந்தை மந்தையாய் மேய்கின்றன.

எறும்புகள் சாரை சாரையாய் ஊருகின்றன.

புஷ்பம் கொத்துக் கொத்தாய் பூக்கிறது.

செடிகளை வரிசை வரிசையாய் நடுகிறார்கள்.

புத்தகங்கள் அடுக்கு அடுக்காய் இருக்கின்றன.

வைக்கோலைப் போர் போராய் போடுகிறார்கள்.

இளநீரை மட மட வென்று குடித்தான்.

தங்கம் பள பளப்பாய் இருக்கும்.

அவன் கல கல வென்று நகைத்தான்.

பயிற்சி :-நல்ல பிள்ளை

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி.

நல்ல பிள்ளை காலையில் எழுந்திருக்கிறான்.

கை கால் சுத்தம் __________.

கடவுளைத் __________.

பாடத்தை நன்றாய்ப் __________.

சுத்தமான உடை __________.

சரியான நேரத்தில் பள்ளிக்கூடம் __________.

உபாத்தியாயர் சொல்வதைக் __________.

அவர் சொல்படி __________.

பிள்ளைகளிடம் அன்பாய் __________.

சரியான காலத்தில் சாப்பாடு சாப்பிடுகிறான்.

மாலையில் விளையாட்டு __________.


இரவில் பாடம் __________.

எப்பொழுதும் உண்மை __________.

பெரியவர்களுக்குப் பணிந்து __________.

நீயும் நல்ல பிள்ளையாய் இரு.

## 17. சூரியனும் சந்திரனும்



சூரியன்



சந்திரன்

சூரியன் காலையில் உதிக்கிறது.
நடுப்பகலில் உச்சியில் இருக்கிறது.
மாலையில் சூரியன் மறைகிறது.
இரவில் சந்திரன் ஒளி கொடுக்கிறது.
சூரியன் சூடும் வெளிச்சமும்
கொடுக்கிறது.
சந்திர ஒளி வெப்பமாக இராது.
சூரிய வெளிச்சம் இல்லாத காலம் இரவு
சூரிய வெளிச்சம் உள்ள காலம் பகல்.
ஒரு பகலும் இரவும் சேர்ந்தது ஒருநாள்
நாளுக்குக் கிழமை என்று பெயர்.
ஏழு நாட்கள் ஒரு வாரம்.
ஒரு மாதத்திற்கு முப்பது நாட்கள்.
பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம்.

## 18. திசைகள்




காலையில் சூரியன் கிழக்கே உதிக்கிறது.
நீ கிழக்கே பார்த்து நில்.
இப்பொழுது உன் முன் பக்கம் கிழக்கு.
உன் பின் பக்கம் மேற்கு.
உன் கைகளைப் பக்கங்களில் நீட்டு.
உன் வலதுகைப் பக்கம் தெற்கு.
உன் இடதுகைப் பக்கம் வடக்கு.
மாலையில் சூரியன் மேற்கில் மறைகிறது.
மொத்தம் நான்கு திசைகள் உண்டு.
அவைகளின் பெயர்களைச் சொல்லு.
கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு
எனத் திசைகள் நான்கு.

## 19. உரையாடல்

ராமா, இது உன் புத்தகமா?

ஆம் ஐயா, அது என் புத்தகம்.

இது உன் கற்பலகையா?

இல்லை ஐயா, அது என்னுடையது அல்ல.

கமலா, உனக்கு எத்தனை தம்பி உண்டு?

எனக்கு ஒரு தம்பி உண்டு, அம்மா!

உனக்குத் தங்கை உண்டா?

அம்மா, எனக்குத் தங்கை இல்லை.

சீனு, உனக்கு என்ன வேண்டும்?

எனக்குப் புத்தகம் வேண்டும், ஐயா!

உனக்குப் பேனா வேண்டுமா?

எனக்குப் பேனா வேண்டாம், ஐயா!

கோபாலா, கணக்குச் செய்.

வகுப்பில் சத்தம் செய்யாதே.

## 20. உரையாடல்

நீ பள்ளிக்கூடம் போகிறாயா ?
ஆம், நான் பள்ளிக்கூடம் போகிறேன்.
சூரி, இன்று என்ன கிழமை ?
இன்று ஞாயிற்றுக் கிழமை.
இன்று பள்ளிக்கூடம் உண்டா ?
இன்று பள்ளிக்கூடம் இல்லை.
நேற்று என்ன கிழமை ?
நேற்று சனிக் கிழமை.
நீ நேற்று பள்ளிக்கூடம் போனாயா ?
நான் நேற்று பள்ளிக்கூடம் போனேன்.
நாளை என்ன கிழமை ?
நாளை திங்கட் கிழமை.
நீ நாளை பள்ளிக்கூடம் போவாயா ?
நான் நாளை பள்ளிக்கூடம் போவேன்.
இப்பொழுது நீ என்ன செய்கிறாய் ?
இப்பொழுது நான் எழுதுகிறேன்.
இன்று காலையில் என்ன செய்தாய் ?
இன்று காலையில் பாடம் படித்தேன்.
இன்று மாலையில் என்ன செய்வாய் ?
இன்று மாலையில் விளையாடுவேன்.

## 21. உரையாடல்

சூரி, உன் புத்தகத்தை எடு.
நீ என்ன செய்தாய்?
நான் புத்தகத்தை எடுத்தேன்.
அதை மேஜையின் மேல் வை.
ராமா, சூரி என்ன செய்கிறான்.
சூரி புத்தகத்தை வைக்கிறான்.
கோபாலா, சூரி என்ன செய்தான்?
சூரி புத்தகத்தை வைத்தான்.
நான் என்ன செய்கிறேன்?
நீங்கள் புத்தகத்தை எடுக்கிறீர்கள்.
நான் என்ன செய்தேன்?
நீங்கள் புத்தகத்தை எடுத்தீர்கள்.
புத்தகம் எங்கே இருந்தது?
புத்தகம் மேஜையில் இருந்தது.
சூரி, இங்கே வா.
ராமா, சூரி என்ன செய்தான்?
சூரி அங்கே வந்தான்.
நீ எங்கே போனாய்?
நான் வீட்டுக்குப் போனேன்.
மாலையில் நீ எங்கே போவாய்?
மாலையில் விளையாடப் போவேன்.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப் படி :—

1. நான் இப்பொழுது வருகிறேன்.
2. நாங்கள் ——— ———.
3. நீ ——— ———.
4. நீங்கள் ——— ———.
5. அவன் ——— ———.
6. அவள் ——— ———.
7. அவர்கள் ——— ———.
8. அது ——— ———.
9. அவைகள் ——— ———.

1. நான் நேற்று வந்தேன்.
2. நாங்கள் ——— ———.
3. நீ ——— ———.
4. நீங்கள் ——— ———.
5. அவன் ——— ———.
6. அவள் ——— ———.
7. அவர்கள் ——— ———.
8. அது ——— ———.
9. அவைகள் ——— ———.

1. நான் நாளை வருவேன்.
2. நாங்கள் ——— ———.
3. நீ ——— ———.
4. நீங்கள் ——— ———.
5. அவன் ——— ———.
6. அவள் ——— ———.
7. அவர்கள் ——— ———.
8. அது ——— ———.
9. அவைகள் ——— ———.

## 22. சுக வழி

1. காலையில் துயில் எழு.
2. தெய்வத்தை வழிபடு.
3. பற்களை நன்றாய்த் துலக்கு.
4. அழுக்குத் தேய்த்துக் குளி.
5. ஆடையைத் துவைத்துக் கட்டு.
6. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
7. கூழானாலும் குளித்துக் குடி.
8. நன்றாக மென்று உண்.
9. மீதூண் விரும்பேல்.
10. பசித்துப் புசி.
11. மாலையில் உலாவு.
12. வியர்க்க விளையாடு.
13. கண்ட இடத்தில் துப்பாதே.
14. நகத்தைக் கடிக்காதே.
15. சுத்தம் சோறு போடும்.


### பயிற்சி

1. விடை எழுது :—
   1. காலையில் எழுந்ததும் என்ன செய்யவேண்டும்?
   2. எப்படிக் குளிக்கவேண்டும்?
   3. எப்பொழுது புசிக்கவேண்டும்?

2. பொருத்தமாகச் சேர்த்துப்படி :—


| | |
|---|---|
| நகத்தை | குளித்துக் குடி. |
| மாலையில் | துப்பாதே. |
| கூழானாலும் | கடிக்காதே. |
| கண்ட இடத்தில் | உலாவு. |


## 23. எலிக் கூடு



கூட்டில் ஆகாரம் இருக்கிறது.


ஒரு எலி வருகிறது.






கூட்டுக்குள் நுழைகிறது.

ஆகாரத்தைக் கடிக்கிறது.





எலி கூட்டில்
அகப்படுகிறது.

கூட்டில் என்ன இருந்தது?

எலி என்ன செய்தது?

பிறகு என்ன நடந்தது?

கூட்டில் ஆகாரம் இருந்தது; எலி வந்தது; கூட்டுக்குள் நுழைந்தது; ஆகாரத்தைக் கடித்தது; எலி கூட்டில் அகப்பட்டது.

## 24. பூனை



பூனை வீட்டில் வளரும் பிராணி. பூனையில் பல நிறங்கள் உண்டு.

பூனை பகலில் படுத்துத் தூங்கும். இரவில் அதற்குக் கண் நன்றாய்த் தெரியும். பூனை எலி பிடிக்கும்.

பூனையின் கால்களின் அடியில் மெதுவான சதைத் திண்டுகள் உண்டு. அதன் நகங்கள் கூர்மையானவை. சாதாரணமாய் அது நகங்களை உள்ளே இழுத்துக் கொண்டிருக்கும். அது நடக்கும்போது ஓசை உண்டாவதில்லை, இஷ்டமானபோது அது நகங்களை வெளியே நீட்டிக் கொள்ளும். எலியைக் கண்டதும் நகங்களை நீட்டிக்கொண்டு அதன் மேல் பாயும்.

பால், தயிர், வெண்ணெய், நெய், மாமிசம், சோறு முதலியவைகளைப் பூனை தின்னும். எலிகளையும் சிறு பறவைகளையும் பிடித்துத் தின்னும். நாயைக் கண்டால் பயந்து ஓடும்.

புதுச் சொற்கள் :—

நன்றாய் - படுத்து - தூங்கும் - மெதுவான - சதை - பாயும் - தின்னும்.

பயிற்சி

1. விடை எழுது :—
   1. பூனைக்குக் கால்களின் அடியில் என்ன இருக்கின்றன ?
   2. பூனை நடக்கும்போது ஏன் ஓசை உண்டாவதில்லை?
   3. பூனை எவற்றைச் சாப்பிடும்?
2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :—
   1. பூனைக்கு ——— கண் நன்றாகத் தெரியும்.
   2. பூனை ——— பிடிக்கும்.
   3. பூனை எலி பிடிக்கும்பொழுது தன் நகங்களை ——— அதன் மேல் பாயும்.


---

## 25. முரசுப் பாட்டு

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர் ?
பிள்ளைகள் பெற்றதப் பூனை – அவை
பேருக் கொரு நிறமாகும் ;
சாம்பல் நிறம் ஒரு குட்டி—கருஞ்
சாந்து நிறம் ஒரு குட்டி.
பாம்பு நிறம் ஒரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறம் ஒரு குட்டி.
எந்த நிறம் இருந்தாலும் அவை
யாவும் ஒரே தரம் அன்றோ ?
இந்த நிறம் சிறி தென்றும்—இஃது
ஏற்றம் என்றும் சொல்ல லாமோ ?
ஒன்றென்று கொட்டுமுரசே !—அன்பில்
ஓங்கென்று கொட்டுமுரசே !
நன்றென்று கொட்டுமுரசே !—இந்த
நானில மாந்தருக் கெல்லாம். —பாரதியார்.

## 26. நாய்

இது ஒரு நாயின் படம். நாய் வீட்டில் வளரும் பிராணி. நாயில் பல வகைகள் உண்டு. நாயில் பல நிறங்களும் உண்டு.



தன்னை வளர்ப்பவரிடம் நாய் பிரியமாய் இருக்கும். வீட்டைக் காவல்செய்யும். நாய்க்குச் சந்தோஷம் வந்தால் வாலை ஆட்டும். கோபம் வந்தால் பல்லைக்காட்டி உறுமும். அந்நியரைக் கண்டால் குரைக்கும்.

நாய் தூரத்தில் உள்ள பொருள்களையும் வாசனையால் அறிந்துகொள்ளும். இதை மோப்பம் பிடித்தல் என்று சொல்லுகிறோம்.

நாய் வேகமாய் ஓடும். சில நாய்கள் தண்ணீரில் நன்றாய் நீந்தும். நாய்கள் மனிதனுக்குப் பல உதவிகள் செய்கின்றன. பால், சோறு, இறைச்சி, முதலியவற்றை நாய் தின்னும். எலும்பைக் கடிக்க இதற்கு அதிகப் பிரியம். இது நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டே ஓடும். நாய் மிகவும் நன்றியுள்ள பிராணி.

புதுச் சொற்கள் :—

பிரியம் - சந்தோஷம் - கோபம் - வாசனை - மோப்பம் - உதவி - அறிந்துகொள்ளும்.

## பயிற்சி

1. **விடை எழுது :—**

   1. சந்தோஷம் வந்தால் நாய் என்ன செய்யும்?
   2. கோபம் வந்தால் நாய் என்ன செய்யும் ?
   3. நாய் எவற்றைப் பிரியமாய்த் தின்னும் ?

2. **கீழ்வரும் எழுத்துக்களைச் சரியானபடி மாற்றி எழுதிச் சொற்களாக்கு.**


   ணிபிரா — ல்வகா — பம்ப்மோ—
   லும்எபு — யம்பிரி — ஊனசவா.

---


## 27. வாகனங்கள்




இது ஒரு கை வண்டி. இதை மனிதன் இழுக்கிறான். இதில் மூட்டைகளை ஏற்றுவார்கள்.




இது ஒரு மாட்டு வண்டி. வண்டியை மாடு இழுக்கிறது. இதை ஒற்றை மாட்டு வண்டி என்று சொல்லுகிறோம். இந்த வண்டியில் மனிதர்கள் ஏறிப் போவார்கள். இதில் சாமான்களும் ஏற்றலாம். இரண்டு மாடுகள் இழுக்கும் வண்டியும் உண்டு. அதை இரட்டை மாட்டு வண்டி என்று சொல்லுகிறோம்.




இது ஒரு குதிரை வண்டி. குதிரை வண்டி வேகமாய்ப் போகும். இதில் மனிதர் ஏறிச் செல்லுவார்கள்.



இது புகை வண்டி. இது இரும்புத் தண்டவாளங்களின் மேல் ஓடும். இது நீராவியால் ஓடுகிறது. இதில் பல வண்டிகள் இருக்கின்றன. வண்டிகளை எஞ்சின் இழுக்கிறது. புகை வண்டி மிகவும் வேகமாய்ப் போகும்.



இது ஒரு மோட்டார் வண்டி. இது தரையில் ஓடும். இதற்கு நான்கு சக்கரங்கள் உண்டு. சக்கரங்களைச் சுற்றிலும் ரப்பர் போட்டிருக்கிறது. இதுவும் மிக வேகமாய்ப் போகும்.



இது ஒரு சைக்கிள் வண்டி. இதற்கு இரண்டு சக்கரங்கள் உண்டு. இதைத் துவிச் சக்கர வண்டி என்றும் சொல்லலாம். இதில் ஒருவர் ஏறிச் செல்லலாம்.



இது ஒரு கப்பல். கப்பல் கடலில் போகும். இக் காலத்தில் நீராவி யின் சக்தியால் கப்பல்கள் ஓடுகின்றன. கப்பலில் மனிதர்களும் போவார்கள்; சாமான்களையும் ஏற்றிச் செல்லுவார்கள்.

புதுச் சொற்கள் :—

மூட்டைகள் - வேகமாய் - செல்லுவார்கள் - தண்டவாளம் - நீராவி - எஞ்சின் - ரப்பர் - துவிச் சக்கர வண்டி.

பயிற்சி

1. விடை எழுது :—

1. எது வேகமாகப் போகும்—குதிரை வண்டியா, மாட்டு வண்டியா ?

2. மோட்டார் வண்டிச் சக்கரங்களைச் சுற்றி என்ன போடப்பட்டிருக்கிறது ?

3. கப்பல் எதன் சக்தியால் ஓடுகிறது ?

2. பொருத்தமாகச் சேர்த்துப்படி :—

| | |
|---|---|
| புகைவண்டி | குதிரையால் இழுக்கப்படும். |
| மாட்டு வண்டி | ரப்பர்ச் சக்கரம் உடையது. |
| மோட்டார் வண்டி | மாடுகளால் இழுக்கப்படும். |
| குதிரை வண்டி | தண்டவாளங்களின் மேல் செல்லும். |

## 28. பிராணிகளிடத்து அன்பு

(பாட்டு)



ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா. (1)

சின்னஞ் சிறு குருவிபோல—நீ
திரிந்து பறந்துவா பாப்பா.
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா. (2)

கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா. (3)

வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா. (4)

—பாரதியார்

## படப் பழக்கம்—3

## தைரியம் உள்ள ராமன்




ராமனும் அவன் தங்கையும் தெருவில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நாய் அவர்களைக் கடிக்க ஓடிவந்தது. ராமனுடைய தங்கை பயந்து அழுதாள். ராமன் தன் தங்கையை எப்படிக் காப்பாற்றினான்?

படத்தைப் பார்த்து, கதையைச் சொல்லுங்கள்.

## 29. நல்ல பழக்கம்

(பாட்டு)

என் அருமைக் குழந்தாய்
இன்று காலை எழுந்தாய்
சொன்ன சொல்லைக் கடவாய்
கூறு கூறுப்பாய் நடப்பாய்.

காலையிலே எழுவாய்
கடவுளைத் தொழுவாய்
வேலைகளில் முயல்வாய்
விருப்புடன் பயில்வாய்.

அன்னை தந்தை வணங்கு
அவர் சொல்லுக் கிணங்கு
நன்னயமாய்ப் பழகு
நல் வழியில் ஒழுகு.

பள்ளிக்கூடம் போக
பரபரப் பாக
உள்ள மகிழ்வோடு
உற்சாகமாய் ஓடு.

நல்ல பிள்ளையோடு
நாளும் நீயே கூடி
நல்லவனாய்ச் சேராய்
நன்மையுண்டு பாராய்.

சின்னஞ் சிறு ஜந்துவை
செய்யாதே நீ தொந்தரை
அன்னம் தண்ணீர் தந்ததை
ஆதரிப்பாய் மைந்தனே!

—நா. கனகராஜ ஐயர்.

## 30. புத்தியுள்ள காகம்

வெயில் காலத்தில் ஒரு நாள் ஒரு காகத்திற்குத் தாகமாய் இருந்தது. தண்ணீருக்காக அது அங்கும் இங்கும் அலைந்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை.



கடைசியில் ஓர் இடத்தில் தண்ணீர்க் குடம் ஒன்றைப் பார்த்தது. உடனே குடத்தின் மேல் உட்கார்ந்தது. ஆனால் குடத்தில் கொஞ்சம் தண்ணீர்தான் இருந்தது. அது காகத்திற்கு எட்டவில்லை.

காகம் 'என்ன செய்யலாம்' என்று யோசித்துப் பார்த்தது. பிறகு கீழே கிடந்த சிறு கல் ஒன்றைத் தன் அலகால் பொறுக்கியது. அதைக் கொண்டு வந்து தண்ணீர்க் குடத்தில் போட்டது. இப்படியே ஒவ்வொன்றாகப் பல கற்களைப் போட்டது. குடத்தில் இருந்த தண்ணீர் சிறிது சிறிதாக மேலே வந்தது.

கடைசியில் குடத்தில் இருந்த தண்ணீர் காகத்திற்கு எட்டியது. காகமும் வயிறு நிறையத் தண்ணீர் குடித்தது. அதன் தாகமும் அடங்கியது. பின்பு அது சந்தோஷமாய்ப் பறந்து சென்றது.

புதுச் சொற்கள் :—

தாகம் - இடம் - அலகு - வயிறு - அலைந்தது - அடங்கியது - கிடைக்கவில்லை - எட்டவில்லை - யோசித்து - ஒவ்வொன்றாக.

### பயிற்சி


1. விடை எழுது :—
   1. காகம் எதற்காக அங்குமிங்கும் அலைந்தது?
   2. குடத்தில் எவ்வளவு தண்ணீர் இருந்தது?
   3. காகம் குடத்தில் என்ன போட்டது?
   4. குடத்திலிருந்த தண்ணீர் எப்பொழுது மேலே வந்தது?

2. கீழே உள்ள சொற்களைச் சரியானபடி மாற்றி வாக்கியங்களாக அமை :—
   1. தாகம் காகத்தின் அடங்கியது.
   2. கற்களை போட்டது குடத்தில் காகம்.
   3. எட்டவில்லை குடத்தில் காகத்திற்கு தண்ணீர் இருந்த.

---

## 31. பள்ளிக்கூடத் தோட்டம்

இது எங்கள் பள்ளிக்கூடத் தோட்டம். முதலில் நாங்கள் நிலத்தை நன்றாய்க் கொத்தினோம். பிறகு உரம் போட்டோம். பாத்திகள் கட்டினோம். விதைகள் விதைத்தோம். சில செடிகளை நட்டோம். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தோம். பாத்திகளுக்குப் பாய்ச்சினோம். செடி, கொடி முதலியன முளைத்துத் தழைத்தன.



இது கீரைப் பாத்தி. பாத்தியில் கீரை விதைகளைத் தெளிக்க வேண்டும். கீரையைச் சமைத்துச் சாப்பிடலாம். உடல் நலத்துக்கு இது மிகவும் நல்லது.



இது கத்திரிச் செடி. செடியில் கத்திரிக்காய்களைப் பார். கத்திரிச் செடிகள் அதிக உயரம் வளரா. வெண்டை, மிளகாய், கொத்தவரை முதலிய பல காய் கறிச் செடிகளும் இங்கே இருக்கின்றன.



இது அவரைக் கொடி. அவரைக் கொடி உயரப் படரும். சுரை, புடல், பீர்க்கு முதலிய கொடிகளும் உயரப் படரும். பறங்கிக் கொடி தரை மேல் படரும். பூசணி, பாகல் முதலிய கொடிகளும் தரைமேல் படரும். காய் கறிகளைச் சமைத்துச் சாப்பிடுகிறோம்.

இது ரோஜாச் செடி. ரோஜாப் புஷ்பம் அழகானது. நல்ல வாசனையும் உள்ளது. மல்லிகை, சாமந்தி, அரளி முதலிய புஷ்பச் செடிகளும் இங்கே இருக்கின்றன. முல்லை, சம்பங்கி முதலிய புஷ்பக் கொடிகளும் இருக்கின்றன.





இது ஒரு வாழை. இதற்கு விதை கிடையாது. வாழைக் கன்றை நடவேண்டும். வாழைக்குக் கிளைகள் இல்லை. இதன் இலை பெரியது. இலையில் சாப்பிடலாம். வாழையில் ஒரு குலைதான் உண்டாகும். குலையில் காய்கள் இருக்கின்றன. வாழைப் பூவைப் பார். வாழைப்பூ, தண்டு, காய் இவைகளைக் கறி சமைக்கலாம். வாழைப் பழத்தைச் சாப்பிடலாம். எங்கள் தோட்டம் மிகவும் செழிப்பாய் இருக்கிறது.

புதுச் சொற்கள் :—

தோட்டம் - நிலம் - உரம் - பாத்தி - கிணறு - உடல் நலம் - காய் கறி - கன்று - கிளை - குலை - செழிப்பு - கொத்து - நடு - இறை - பாய்ச்சு - முளை - தழை - தெளி - சமை - படர்.

பயிற்சி

1. விடை எழுது:—

1. கீரை எதற்கு நல்லது?
2. தோட்டத்தில் வளரும் காய்கறிச் செடிகளில் நான்கு சொல்லு.
3. வாழையின் எந்தப் பாகங்களைச் சமைத்து உண்ணலாம்?

2. பொருத்தமாகச் சேர்த்து எழுது:—

| | |
|---|---|
| அவரைக் கொடிக்கு | நல்ல வாசனை உண்டு. |
| ரோஜாப் பூவுக்கு | கிளைகள் இல்லை. |
| வாழைக்கு | பந்தல்போடவேண்டும். |

## 32. அரிசியின் கதை

நெல் விளையும் வயல் நன்செய். கம்பு, சோளம், துவரை முதலிய தானியங்கள் விளையும் நிலம் புன்செய். படத்தில் இருப்பது ஒரு நெல் வயல். நெல் வயலை முதலில் கலப்பையால் உழுவார்கள். கலப்பைக்கு ஏர் என்ற பெயரும் உண்டு. கலப்பையை இரண்டு மாடுகள் இழுத்துப் போகும்.

உழுதபின் தண்ணீர் பாய்ச்சுவார்கள். பிறகு பரம்பு அடிப்பார்கள். பரம்பு அடிப்பதால் வயல் ஒரே மட்டம் ஆகும். பரம்பு அடித்தபின் வயலில் ஓரிடத்தில் விதை தெளிப்பார்கள். சில நாட்களில் விதைகள் ஊறி முளைக்கும். இந்த முளைக்கு நாற்று என்று பெயர்.

நாற்று வளர்ந்ததும் பிடுங்கி நடுவார்கள். இதுதான் நாற்று நடவு. நாற்று சில நாட்களில் பயிர் ஆகும். பிறகு களை எடுப்பார்கள். இதன் பின் பயிர்கள் கதிர் விடும்.

கதிர்கள் முற்றித் தலை சாய்ந்தபின் அவைகளை அறுத்துக் கட்டுகளாகக் கட்டுவார்கள். இதுதான் அறுவடை. கட்டுகளைக் களத்துக்குக் கொண்டுபோவார்கள். அங்கே தான் தாளைப் பிடித்துக்கொண்டு அவைகளை அடிப்பார்கள். கதிர்களிலிருந்து நெல் உதிர்ந்து விடும். நெல் இல்லாத தாள்களை வைக்கோல் என்று சொல்லுவார்கள். வைக்கோலைப் போர் போராய்ப் போடுவார்கள்.

உதிர்ந்த நெல்லைத் தூசிபோக்கிக் குவிப்பார்கள். பிறகு நெல்லை அளந்து சாக்குப் பைகளில் கட்டுவார்கள். அவைகளை வண்டியில் ஏற்றிக் களஞ்சியத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்.


1
2
3
4
5
6
7
8

நெல்லை உரலில் போட்டு உலக்கையால் குத்துவார்கள். நெல்லைக் குத்தினால் அரிசி ஆகும். அரிசியைச் சோறு சமைப்பார்கள். சோற்றை நாம் சாப்பிடுகிறோம். உரலில் குத்தின அரிசியே நல்லது.

புதுச் சொற்கள்: –

வயல் - நன்செய் - புன்செய் - மட்டம் - நாற்று - பயிர் - களை - கதிர் - களம் - தாள் - வைக்கோல் - போர் - தூசி - சாக்குப்பை - களஞ்சியம் - விளையும் - ஊறி - பிடுங்கு - முற்றி - உதிர்ந்து - அளந்து - அறு - கட்டு - குவி - குத்து - உழுதல் - பரம்பு அடித்தல் - நடவு - அறுவடை - கதிர் அடித்தல்.

பயிற்சி

1. விடை எழுதுக:—

   1. நாற்றுக்களை என்ன செய்வார்கள்?
   2. நெற் கதிர்களை அறுத்த பிறகு என்ன செய் வார்கள்?
   3. களத்தில் கதிர்களிலிருந்து நெல்லை எப்படிப் பிரித்தெடுப்பார்கள்?

2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி:—

   1. பரம்பு அடிப்பதால் வயல்————ஆகும்.
   2. நெல் உதிர்ந்த தாளுக்கு——என்று பெயர்.
   3. நெல்லை உரலில்போட்டு———குத்துவார்கள்.

3. எதிர்ப் பக்கத்திலுள்ள படங்களைப் பார்த்து ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது.

## 33. கடைத் தெரு

(மணியும் அவன் தந்தையும் கடைத் தெருவுக்குப் போகிறார்கள்)

*மணி:*—அப்பா! இந்தத் தெருவில் மட்டும் ஏன் ஜனங்கள் கூட்டமாய் இருக்கிறார்கள்?

**தந்தை:**-மணி! இது கடைத்தெரு; அதனால் தான் இங்கே கூட்டம் அதிகமாயிருக்கிறது. இங்கே ஜனங்கள் என்ன செய்கிறார்கள் பார்! அதோ அவன் கையில் என்ன வைத்திருக்கிறான்?

*மணி:*—அப்பா! அவன் கையில் ஒரு கூடை வைத்திருக்கிறான். அதில் பல காய்கறிகள் இருக்கின்றன. இவைகளை எங்கேயிருந்து கொண்டு போகிறான்?

**தந்தை:**—அவன் அவைகளைக் காய்கறிக்கடையிலிருந்து வாங்கிக்கொண்டு போகிறான். அதோ பார்! அந்தக் காய்கறிக் கடையில் எல்லாவிதமான காய்கறிகளும் இருக்கின்றன.

*மணி:*-அப்பா! அதோ ஒரு பெண் ஒரு புதுச் சேலையைக் கையில் வைத்திருக்கிறாளே. அது எங்கே வாங்கினது?

**தந்தை:** சேலை, வேஷ்டி முதலிய துணிகள் விற்கும் கடைக்கு ஜவுளிக்கடை என்று பெயர்.

*மணி:*—நம் வீட்டுக்கு வேண்டிய புளி, உப்பு, மிளகாய் எல்லாம் எங்கே கிடைக்கும்?

**தந்தை:**—மணி! அதோ பார்! அதுதான் பல சரக்குக் கடை. அதில்தான் அவைகளை வாங்கலாம்.

*மணி:*—பக்கத்தில் ஒரு கடையில் குடங்களும் தகர டப்பிகளும் இருக்கின்றன. அது என்ன கடை அப்பா?

*தந்தை:*—மணி! நீயே போய்க் கேட்டுக் கொண்டு வா.

(மணி போய்க் கேட்டு வருகிறான்.)

*மணி:*—அப்பா! அது எண்ணெய்க் கடையாம். அதற்குப் பக்கத்தில் பணியாரக்கடை இருக்கிறது. எனக்கு ஒரு லட்டு வாங்கித் தருகிறீர்களா?

*தந்தை:*—ஆகட்டும் மணி!

*மணி:*—அப்பா! எனக்கு ஒரு பென்சில் வேண்டும். அதை எங்கே வாங்கலாம்?

*தந்தை:*—மணி! இந்த இரண்டு அணாவைக் கொண்டுபோய் நீயே விசாரித்து வாங்கி வா.

*மணி:*—சரி அப்பா!

(மணி போய்ச் சிறிது நேரத்திற்குப் பின், பென்சிலுடன் திரும்பி வருகிறான்.)

*தந்தை:*—மணி! ஏன் இவ்வளவு நேரம்?

*மணி:*—அப்பா! முதலில் ஒரு கடைக்குப் போனேன். அதில் பென்சில் இல்லையாம். அது நவதானியக் கடையாம். அங்கே நெல், உளுந்து, பயறு முதலியவைகள் இருக்கின்றன. பின்பு ஒரு கடைக்குப் போனேன். அது பழக்கடையாம். அதில் பலவிதமான பழங்கள் இருக்கின்றன. பிறகு இரும்புக்கடை, மரக்கடை, இவைகளிலெல்லாம் கேட்டுவிட்டுக் கடைசியில் ஒரு கடையில் இதை வாங்கினேன். அந்தக் கடையில் பேனா, பென்சில், காகிதம், நோட்டு எல்லாம் இருக்கின்றன, அப்பா!

**தந்தை:**—நல்லது, இன்று நீயே பென்சில் வாங்கத் தெரிந்துகொண்டாய். வீட்டுக்குப் போவோம் வா.

புதுச் சொற்கள்:—

**ஜனங்கள் - கூட்டம் - ஜவுளி - எல்லாம் - பலசரக்கு - தகர டப்பிகள் - லட்டு - நேரம் - நவதானியம் - நோட்டு - பணியாரம் - பென்சில் - காகிதம் - அதனால் - கேட்டு - விசாரித்து - திருப்பி.**

பயிற்சி

1. **விடை எழுதுக:**—
   1. துணிகள் விற்கும் கடைக்கு என்ன பெயர்?
   2. பலசரக்குக் கடையில் என்ன சாமான்கள் கிடைக்கும்?
   3. நவதானியக் கடையில் கிடைக்கும் தானியங்களில் மூன்று சொல்லு.

2. **பின்வருபவற்றைப் பொருத்தமாகச் சேர்:**—

| | |
|---|---|
| காய்கறிக் கடை | மிளகு |
| துணிக் கடை | உளுந்து |
| பலசரக்குக் கடை | சேலை |
| நவதானியக் கடை | பாகற்காய் |

## 34. புறாவும் எறும்பும்

ஒரு குளக்கரையில் மரம் ஒன்று இருந்தது. அதில் ஒரு புறா கூடுகட்டி வசித்து வந்தது. அந்த மரத்தின் கீழே ஒரு எறும்புப் புற்று இருந்தது. அதில் சில கட்டெறும்புகள் வசித்து வந்தன.

ஒரு நாள் அந்த எறும்புகள் குளக்கரை ஓரத்தில் இரை தேடிக் கொண்டிருந்தன. அப்பொழுது பலமான காற்று அடித்தது. ஓர் எறும்பு தண்ணீரில் தவறி விழுந்தது. அது தண்ணீரில் நீந்த முடியாமல் தத்தளித்தது.



மரத்தில் இருந்த புறா இதைப் பார்த்தது. உடனே ஒரு இலையைப் பறித்து, எறும்பின் அருகில் கொண்டுபோய்ப் போட்டது. இலை தண்ணீரின் மேல் மிதந்தது. எறும்பு மெதுவாய் அதில் ஏறிக்கொண்டது. சிறிது நேரத்தில் அந்த இலை எறும்போடு கரையை அடைந்தது. எறும்பும் உயிர் தப்பிக் கரை சேர்ந்தது.



சிறிது நேரத்தில் அங்கு ஒரு வேடன் வந்தான். அழகான அந்தப் புருவைப் பார்த்தான். உடனே தன் வில்லை எடுத்தான். புருவின் மேல் அம்பு எய்யக் குறிவைத்தான்.

மரத்தடியில் இருந்த எறும்பு இதைப் பார்த்தது. புருவைக் காப்பாற்ற எண்ணியது. உடனே ஓடி வேடன் காலைச் 'சுரீர்' என்று கடித்தது. வேடனும் 'ஐயோ' என்று அலறினன். இந்தச் சத்தத்தைக் கேட்ட புரு பறந்து ஓடித் தப்பியது.

புரு எறும்புக்குச் செய்த உதவி வீண் போகவில்லை. எறும்பைப் புரு காப்பாற்றியது. புருவை எறும்பும் காப்பாற்றியது. ஆகையால், உதவி வீண் போகாது.

புதுச் சொற்கள் :—

கரை - புற்று-கட்டெறும்பு - ஓரம் - இரை - குறி - தவறி தப்பி - அருகில் - எய்ய - காப்பாற்ற - வீண்போக - தேடு - விழு - தத்தளி - பறி - மித - அடை - சேர் - எண்ணு - அலறு.

## பயிற்சி

1. விடை எழுது :—

    1. எறும்பு ஏன் தண்ணீரில் விழுந்தது ?
    2. புரு எப்படி எறும்புக்கு உதவி செய்தது ?
    3. எறும்பு புருவுக்கு எப்படி உதவி செய்தது ?

2. தவறான வாக்கியங்களைத் திருத்தி எழுது :—

    1. புரு இலையைப் பறித்துப் போட்டன.
    2. எறும்புகள் கரையில் இருந்தது.
    3. வேடன் ஐயோ என்று அலறியது.

## 35. கிராமம்



தகப்பனார்:—மணி, இந்தப் படத்தைப் பார். இது ஒரு கிராமத்தின் படம்.

மகன்:—அப்பா! நடுவில் ஒரு கோபுரம் தெரிகிறதே. அது என்ன?

தகப்பனார்:—அதுதான் கிராமக் கோவில். அதற்கு நேரே பொதுச் சாவடி இருக்கிறது. சாவடிக்கு எதிரே ஊர்க்கிணற்றைப் பார்.

மற்ருெரு பக்கத்தில் பள்ளிக்கூடம் இருக்கிறது. பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிருர்கள் பார். இவைகளைச் சுற்றிலும் பல வீடுகள் இருக்கின்றன.

**மகன்** :—அப்பா! கிராமத்தைச் சுற்றிலும் என்ன இருக்கிறது ?

**தகப்பனுர்** :—கிராமத்தைச் சுற்றி வயல்களும், தோட்டங்களும் இருக்கின்றன. ஆடுமாடுகள் மேய்வதற்கு வேண்டிய புல்தரைகளும் உண்டு. ஒரு பக்கத்தில் ஒரு ஏரியும் இன்னெரு பக்கத்தில் ஒரு வாய்க்காலும் இருக்கின்றன.

**மகன்** :—கிராமத்து ஜனங்கள் என்ன தொழில் செய்கிருர்கள்.

**தகப்பனுர்** :—அவர்கள் எல்லோரும் நிலங்களை உழுது பயிரிட்டு ஜீவனம் செய்கிருர்கள். அதனுல்தான் அவர்கள் மிகவும் நல்ல நிலைமையில் இருக்கிருர்கள். அவர்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிக்கொள்ள சிறு கடை ஒன்றும் அங்கு உண்டு.

**மகன்** :—அப்பா ! இந்தக் கிராமத்துக்கு என்னையும் கூட்டிப்போகிறீர்களா ?

**தகப்பனுர்** :—மணி ! அப்படியே போகலாம் வா.

**புதுச் சொற்கள் :—**

**கிராமம் - சாவடி - கோபுரம் - புல்தரை - வாய்க்கால் - நிலங்கள் - ஜீவனம் - நிலைமை - சுற்றிலும் - பண்டம் - பொது - ஏரி - கூட்டி - தொழில் - தெரிகிறது.**

பயிற்சி

**விடை எழுது :—**

1. கிராமத்தைச் சுற்றி என்ன இருக்கும்?
2. கிராம மக்கள் பொதுவாக என்ன தொழில் செய்கிறார்கள்?

## 36. ஆத்திசூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்ப திகழ்ச்சி.
9. ஐய மிட்டுண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவ தொழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகஞ் சுருக்கேல்.
14. கண்டொன்று சொல்லேல்.
15. சனி நீராடு.
16. தந்தை தாய்ப் பேண்.
17. நன்றி மறவேல்.
18. பருவத்தே பயிர் செய்.
19. மீதூண் விரும்பேல்.
20. வல்லமை பேசேல்.

## 37. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ(டு)
இணங்க வேண்டாம்.
5. அஞ்சாமல் தனி வழியே
போக வேண்டாம்.
6. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்க வேண்டாம்.
7. தலம் தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம்.
8. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
9. கொலைகளவு செய்வாரோ(டு)
இணங்க வேண்டாம்.
10. குற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.
11. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.
12. மூத்தோர் சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.
13. முன்கோபக் காரரோ(டு)
இணங்க வேண்டாம்.
14. செய்த நன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
15. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.